எவ்வளவு பங்குத்தொகை போட்டு இருக்கிறார்கள்? அந்தப் பங்குத்தொகையைவிட அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலம் அளித்த தொகை அதிகமாயிருந்தால் அரசாங்கமே அதை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மற்றவர்கள் பங்குத் தொகை பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் கூட்டுத்துறையிலே தொழிற்சாலை அமைப்பது என்பதற்கு முன்னாலேயே இம்மாதிரி சேஷசாயி பேப்பர் மில்லிற்கு 1 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு கோடி ரூபாயைத் திருப்பிப் பெறுவதற்கோ அல்லது அந்த ஒரு கோடி ரூபாய் கொடுத்திருப்பதால் அரசு கண்ட்ரோலை அதிகமாக வைத்து பள்ளிப்பாளையம் தொழிற்சாலையை நடத்த ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது கூட்டுத்துறை மூலம் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. 1967-க்கு முன்னால் ஆரம்பிக்கப் பட்டது. அரசாங்கம் எந்தவிதமான பங்கு முதல் போடவில்லை. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூட்டிலே பணம் போடுகிறார்கள். இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மாநில அரசு நிதி நிறுவனம் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். இதற்கேற்ற வகையில் இதிலே அவர்களுக்கு கண்ட்ரோல் இருக்கிறது.

All India Trade Test

* 137 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the All India Trade Test is being conducted in Madras City during 1971–72 ;

(*b*) if so, the subjects in which they are conducted; and

(*c*) the places where they are conducted?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ) & (உ) சட்ட மன்றத்தின் முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் அருகிலுள்ள உருக்காலை

*138 வினு.—**திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணத்திற்குப் பக்கத்தில் உள்ள ஸ்டீல் உருக்குத் தொழிற்சாலையின் வேலை துவக்கப்பட்டு விட்டதா?

---

* 117-120-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 சனவரி 29]

(இ) இல்லை எனில், காலதாமதம் எற்படுவதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) தொழிற்சாலை இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. அது விரைவில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இயக்குதலில் ஏற்பட்ட குறிப்பிட்ட சில இடர்ப்பாடுகள் காரணமாகவும் தொழில் நுட்ப இடர்ப்பாடுகள் காரணமாகவும் இத்தொழிற்சாலை செயல்படத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. கருவிகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. தேவைப்படும் குறிப்பிட்ட சில வகை உருக்கு கிடைக்காததால் உள்நாட்டில் கிடைக்கும் உருக்கைப் பயன்படுத்துவதற்காக தொழிற்சாலைப் பிரிவுகளை மாற்றியமைப்பதற்குத் தேவையான காலமும் இத்தாமதத்திற்குக் காரணமாகும். உயர்வெப்பம் ஏற்கும் பொருட்கள் (Refractories) வழங்குவதில் பற்றுக்குறை ஏற்பட்டது. இருப்பினும், கட்டடப்பணி முழுவதும் முடிக்கப் பட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கனிப் பொருள் உலை சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. ஆனால் மின் அழுத்தப் பொறியில் சில குறைபாடுகள் ஏற்பட்டன. அவை சரி செய்யப்பட்டு வருகின்றன. 1972-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: இதிலே இரண்டு ஆண்டு காலம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் பொறியாளர் களுக்கும், தலைமைப் பொறியாளருக்கும் இரண்டு ஆண்டு காலம் சும்மா இருந்து சம்பளம் கொடுத்தமாதிரி இருக்கிறது. இதிலே மேற்கொண்டு காலதாமதம் ஆகாமல் வேலை தொடங்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது புதிய தகவலாக இருக்கிறது. வேலை தொடங்கிய பிறகுதான் தேவையான ஆட்களை எடுக்க வேண்டும். என்ன வேலைகள் நடைபெறுகிறதோ அதற்குத் தேவையான ஆட்கள்தான் எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. தொ. ப. சீனிவாசன் : அரக்கோணம் உருக்குத் தொழிற் சாலையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறபோது கேரள மாநிலத்தவருக்கு முதலிடம் அளிக்கப்படுவதாகப் புகார் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ் நாட்டு மக்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் அந்தப் பகுதி மக்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது.